**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**CC.NO-233/2019**

**List of Witness LW 4 Examined as PW 3**

| | | | |
|---|---|---|---|
| Name | ராமராசு | Caste: | |
| Father’s name | கந்தசாமி | Calling: | பஞ்சர்கடை |
| Village | அரவம்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வக்கோட்டை | Age: | 52 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.03.2024

(2 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச 317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது. )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கந்தர்வக்கோட்டை காவல்நிலையம் அருகே சுமார் 15 வருடங்களாக பஞ்சர்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் 1,3 எதிரிகளை தெரியும். எனது கடைக்கு அருகே உள்ள ஏஆர்என் வங்கியில் ஆஜர் 1ம் எதிரி வேலை செய்து வந்தார். அவர் மனைவியான 3ம் எதிரி வங்கிக்கு அவ்வப்போது உணவு கொண்டு வந்தார். வங்கியில் அவர்கள் கையாடல் செய்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை )

<u>அரசு தரப்பில் விசாரணை</u>

2011ம் வருடம் எதிரிகள் கையாடல் செய்துவிட்டார்கள் என நான் தெரிந்துகொண்டேன் என்றால் இல்லை, இன்றுதான் எனது வாக்குமூலத்தை படித்து தெரிந்துகொண்டேன். எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் போலிசார் என்னை விசாரணை செய்திருந்தும் விசாரணை செய்யவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கந்தர்வக்கோட்டையில் ஹரிகிருஷ்ணா என்ற நகை அடகுகடை உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான், அதன் உரிமையாளர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ஏஆர்என் நகை கடையின் உரிமையாளர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையாடல் எப்போது நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கின் சம்பவம் குறித்து எந்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் என்னுடைய வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

| |
|---|
| **சாட்சியின் கையொப்பம்** |